இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 353 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 17 – வெள்ளிக்கிழமை 02 ஆகஸ்டு 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 353 : Thiruvalluvar Year - 2055 - Aadi 17 - Friday 02 August 2024 - Madurai 12 Pages ₹ 5.00


## ரூ.47.51 கோடி செலவில்

# காவல்துறைக்கு புதிய கட்டடங்கள் - குடியிருப்புகள்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.8.2024) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் 47 கோடியே 51 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 53 காவலர் குடியிருப்புகள், 6 காவல் நிலையக் கட்டடங்கள் மற்றும் 2 காவல் துறை கட்டடங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் (பொறுப்பு) வினித் தேவ் வான்கேடே ஆகியோர் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக.2-

**காவல்துறை சார்பில் ரூ.47.51 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 53 காவலர் குடியிருப்புகள், 6 காவல் நிலையக் கட்டடங்கள் மற்றும் 2 காவல் துறைக் கட்டடங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.8.2024) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் 47 கோடியே 51 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 53 காவலர் குடியிருப்புகள், 6 காவல் நிலையக் கட்டடங்கள் மற்றும் 2 காவல்துறை கட்டடங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

காவல்துறை என்பது குற்றங்களைத் தடுக்கும் துறையாகவும், தண்டனை பெற்றுத்தரும் துறையாகவும் மட்டும் அல்லாமல், குற்றங்கள் நடக்காத சூழ்நிலையை உருவாக்கும் துறையாகச் செயல்பட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றி வரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள், காவலர் குடியிருப்புகள் கட்டுதல், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் காவலர்களுக்கு குடியிருப்புகள், பாதுகாப்பு பணிகளுக்காக ரோந்து வாகனங்களை கொள்முதல் செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களைத் அரசு செயல்படுத்தி வருகிறது.

**கழக அரசு பொறுப்பேற்ற இம்மூன்று ஆண்டு காலத்தில் காவல் துறையின் உட்கட்டமைப்பு மேம்படுத்திடும் வகையில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களின் விவரங்கள்**

காவல் துறையின் பணிகள் சிறக்க, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள்வரை, ரூ.454.63 கோடி செலவில் 2733 காவலர் குடியிருப்புகள், ரூ.43.60 கோடி செலவில் 41 காவல் நிலையக் கட்டடங்கள், ரூ.69.83 கோடி செலவில் 14 காவல்துறை இதரக் கட்டடங்கள் மற்றும் "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் ரூ.55.19 கோடி மதிப்பிலான 253 குடியிருப்புகள் ஆகியவை காவல்துறையினரின் மேம்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள காவல்துறை கட்டடங்களை திறந்து வைத்தல்**

அதன் தொடர்ச்சியாக, திருச்சிராப்பள்ளி மாவட்டம் - ஜெம்புநாதபுரத்தில் 3 கோடியே 97 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 29 காவலர் குடியிருப்புகள் மற்றும் உறையூரில் 3 கோடியே 1 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 24 காவலர் குடியிருப்புகள், என 6 கோடியே 99 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 53 காவலர் குடியிருப்புகள்;

சென்னை மாவட்டம் - டி.பி சத்திரம் மற்றும் ஜெ.ஜெ நகரில் 3 கோடியே 70 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் செலவிலும், புதுக்கோட்டை மாவட்டம் - ரெகுநாதபுரத்தில் 78 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவிலும், திருவாரூர் மாவட்டம் - மன்னார்குடியில் 1 கோடியே 6 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள 4 காவல் நிலையங்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டம் - பீமா நகரில் 2 கோடியே 70 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த அமர்வு நீதிமன்ற காவல் நிலையம் மற்றும் சிந்தாமணியில் 3 கோடியே 19 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கோட்டை காவல் நிலையம், என 11 கோடியே 43 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 காவல் நிலையங்கள்;

செங்கல்பட்டு மாவட்டம் - மேலக்கோட்டையூரில் இரண்டாம் கட்டமாக 17 கோடியே 43 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவலர் பொதுப்பள்ளி மற்றும் தென்காசி மாவட்டம் - தென்காசியில் 11 கோடியே 64 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாவட்ட காவல் அலுவலகம், என 29 கோடியே 7 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 காவல் துறைக் கட்டடங்கள்;

**என மொத்தம் 47 கோடியே 51 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 53 காவலர் குடியிருப்புகள், 6 காவல் நிலையங்கள் மற்றும் 2 காவல் துறை கட்டடங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ. அருண், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் (பொறுப்பு) வினித் தேவ் வான்கேடே, ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டுவந்த சட்டம்:

## SC, ST பிரிவினருக்கான உள் ஒதுக்கீடு சட்டங்கள் செல்லும்!

### உச்சநீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் அமர்வு ஒருமித்த தீர்ப்பு!

புதுடெல்லி, ஆக.2-

SC, ST பிரிவினருக்கான உள் ஒதுக்கீடு சட்டங்கள் செல்லும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. பட்டியலின, பழங்குடியினத்தவருக்கு உள்ஒதுக்கீடு வழங்க தடையில்லை என உச்சநீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்துள்ளது.

தமிழ்நாட்டில் 2009 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான தி.மு.க. அரசு அருந்ததியினருக்கு மூன்று சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கி உத்தரவிட்டிருந்தது. இதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் 2020 ஆம் ஆண்டு ஐந்து நீதிபதிகள் கொண்ட உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும் என தீர்ப்பு அளித்தது. ஆனால், ஏற்கனவே, உள்ஒதுக்கீட்டை அனுமதிக்கக்கூடாது என்று ஆந்திர மாநில வழக்கில் 2004ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அமர்வு தீர்ப்பு வழங்கியிருந்தது. இதன் காரணமாக இந்த வழக்கை 7 நீதிபதிகள் அமர்வுக்கு உச்சநீதிமன்றம் பரிந்துரை செய்திருந்தது.



இதேபோன்று பஞ்சாப், ஹரியானா மாநில வழக்குகளும் ஏழு நீதிபதிகள் அமர்வுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்குகள் ஒட்டுமொத்தமாக கடந்த பிப்ரவரி மாதம் 7 நீதிபதிகள் அமர்வில் விசாரணை முடிந்து தீர்ப்பு ஒத்திவைக்கப் பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கில் தலைமை நீதிபதி சந்திர சூட் தலைமையிலான 7 நீதிபதிகள் அமர்வு நேற்று தீர்ப்பு வழங்கியது. அதில், பட்டியலின, பழங்குடியினருக்கான உள்ஒதுக்கீட்டை மாநில அரசுகள் வழங்க முடியும் என்று அருந்ததியர் உள் இடஒதுக்கீடு தொடர்பான தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும் என்று 6 நீதிபதிகள் ஒருமித்த தீர்ப்பு வழங்கினர்.

பட்டியலினத்தவரின் உட்பிரிவுகள் எதுவும் பட்டியல் வகுப்பினர் என்ற வரையறையில் இருந்து விலக்கப்படாத காரணத்தால் உள் ஒதுக்கீடு வழங்கலாம் என்றும், உள் ஒதுக்கீடு, அரசியல் சட்டத்தின் 14வது பிரிவை மீறவில்லை என்றும் குறிப்பிட்ட நீதிபதிகள், பட்டியலின, பழங்குடியினத்தவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க தடையில்லை என்றும் தெரிவித்தனர்.

பட்டியலினத்தவர்களும், பழங்குடியினரும் எதிர்கொள்ளும் பாகுபாடு காரணமாக அவர்களால் எளிதில் முன்னிலைக்கு வர முடியவில்லை என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. எனவே அரசியல் சாசன பிரிவு 14, துணை வகைப்பாட்டை அனுமதிக்கிறது என்றும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

---

### மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகளை விரைவுபடுத்த நடவடிக்கை!

## 11 மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அலுவலர்கள்!

### தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, ஆக.2-

மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகளை விரைவுப்படுத்தவும், நலத்திட்டப் பணிகளை கண்காணிக்கவும் 11 மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அலுவலர்களை நியமனம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

மாவட்ட வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்தவும், பொதுமக்களுக்கு சென்றடைய வேண்டிய நலத்திட்ட உதவிகளை கண்காணிக்கவும், இயற்கைச் சீற்றம், நோய்த் தொற்று மற்றும் இன்ன பிற நேரங்களில் அவசர கால பணிகளை கூடுதலாக மேற்கொள்ளவும் மாவட்ட வாரியாக ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் கண்காணிப்பு அலுவலர்களாக நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி 11 மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திருப்பத்தூருக்கு விஜயராஜ் குமார், திண்டுக்கலுக்கு பிரஜேந்திர நவ்னிட், சென்னைக்கு ஜெயஸ்ரீ முரளிதரன், திருவண்ணாமலைக்கு மதுமதி, தூத்துக்குடிக்கு வீர ராகவ ராவ், கள்ளக்குறிச்சிக்கு தர்மேந்திர பிரதாப், திருப்பூருக்கு வள்ளலார், கோவைக்கு நந்தகுமார், புதுக்கோட்டைக்கு சுந்தரவல்லி, நாமக்கலுக்கு ஆசியா மரியம், நாகைக்கு மகேஸ்வரன் உள்ளிட்ட ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீர்வளத் துறையின் கீழ் நடைபெற்று வரும் பல்வேறு நீர் மேலாண்மை பணிகள், பட்டா மாறுதல், ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்தல், ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ளுதல், பிளாஸ்டிக் தடை தொடர்பான உத்தரவை அமல்படுத்துதல், அனைத்து பள்ளிகளிலும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல், அரசின் முக்கிய மற்றும் மக்கள் நலத் திட்டங்களை விரைவாக செயல்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை கண்காணிக்க இவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், இயற்கை பேரிடர் காலங்களில் மாவட்ட ஆட்சியருடன் ஒருங்கிணைந்து பணியாற்றி அந்தந்த மாவட்டத்தில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இவைகள் தொடர்பாக நேரடியாக ஆய்வு செய்து சிறப்புத்திட்ட செயலாக்க துறைக்கு அறிக்கையாக அளிக்க வேண்டும் என்றும் அந்த அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### வயநாடு நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 291 ஆக உயர்வு!

## 3வது நாளாக போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகள்!

### ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்!

வயநாடு, ஆக.2-

கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 291 ஆக உயர்ந்துள்ள நிலையில், மூன்றாவது நாளாக மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

கேரள மாநிலம் வயநாட்டில் முண்டக்கை, சூரல்மலை உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவால் ஏராளமான மக்கள் மண்ணில் புதைந்தனர். இதையடுத்து, மேற்கொள்ளப்பட்ட மீட்பு பணியில் முதற்கட்டமாக, 130 பேர் உயிரிழந்ததாக தெரிய வந்தது. தேசிய, மாநில பேரிடர் மீட்பு படையினர், கேரள காவல்துறையினர், தீயணைப்பு படையினர் ஆகியோருடன் முப்படை வீரர்களும் களமிறங்கி தீவிர மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மூன்றாவது நாளாக போர்க்கால அடிப்படையில் மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்காலிக பாலம் அமைக்கும் பணிகளிலும் ராணுவம் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி, உயிரிழந்தோர் எண்ணிக்கை 291 ஆக உயர்ந்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். முண்டக்கையில் இருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் நிலச்சரிவு ஏற்பட்ட ஆரம்பப் புள்ளியை மீட்புக்குழு அடைந்துள்ளது. அந்த பகுதியில், மோப்ப நாய்கள் உதவியுடன் மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.